ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2315/46 - 2023 ජනවාරි මස 19 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.01.19
*2315/46 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1969 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்டம்*

*1985ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க மற்றும் 1987ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவு மற்றும் 14ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 20 ஆவது பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்ஹ ஆகிய என்னால் விதிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகள்.*

**ரணில் விக்கிரமசிங்ஹ,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சில் இருந்து,
கொழும்பு 01,
2023, சனவரி 19.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ் ஒழுங்குவிதிகள் "**2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள்**" என அழைக்கப்படும்.

2. திருத்தம் செய்யப்பட்ட, 2022 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆம் திகதிய 2278/21 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள், இதன் மூலம் மேலும் திருத்தம் செய்யப்படுகின்றது.

1A - PG 6189 — 376 (2023/01)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆம் திகதிய 2297/79 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளில் இலக்கம் 4 மற்றும் 2022 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதிய 2304/04 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகை என்பன பொருட்களின் இறக்குமதியில் எவ்வித பாரபட்சமும் இல்லாமல் இத்தால் முற்றாக இரத்து செய்யப்படுகின்றது.

4. 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 24ஆம் திகதிய 2285/19 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் கீழ் திருத்தம் செய்யப்பட்டு பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆம் திகதிய 2278/ 21 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரிகையின் 2022 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளில் இலக்கம் 4(ஈ) ஒழுங்குவிதியில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் பிரகாரம் வியாபார, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் சிபாரிசின் பேரில் திறந்த கணக்குகள் /பொருட்கள் விற்பனையின் பின்னர் பணம் செலுத்துவதன் அடிப்படையின் கீழ் கொடுப்பனவு முறைகளின் கீழ் இறக்குமதி செய்யப்படுகின்ற கோதுமை மா **(எச்.எஸ். குறியீட்டு இலக்கம் 1101.00.10)** இலங்கை துறைமுகம் /விமான நிலையத்திற்கு வருகை தருகின்ற திகதி 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்படுகின்றது.

5. திருத்தப்பட்ட 2022 ஆண்டின் 10 ஆம் இலக்க கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் **அட்டவணை I இல் எச்.எஸ். குறியீட்டு இலக்கம் 1101.00.10** இன் கீழ் குறிப்பிடப்பட்ட கோதுமை மாவின் இறக்குமதி, 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31ஆம் திகதி வரை 2022 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆம் திகதிய 2287/21 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் 6 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

6. இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் மேலுள்ள ஒழுங்குவிதி இலக்கம் 4 மோசடி செய்து மேற்கொள்ளக் கூடிய எந்தவொரு இறக்குமதி தொடர்பாகவும் வியாபார, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

7. இவ் ஒழுங்குவிதிகளின் நோக்கத்தினை அடைந்து கொள்வதற்காக இவ் ஒழுங்குவிதிகளை வினைதிறன் மிக்கதாக நடைமுறைப்படுத்துவதனை முன்னிட்டு இலங்கை சுங்கத்திற்கு மற்றும் அனுமதிப் பத்திரதார வங்கிகளுக்குத் தேவையான "செயற்பாட்டு ஆலோசனைகளை" வழங்குவதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு நாயகத்திற்கு இதன் மூலம் அனுமதி வழங்கப்படுகின்றது.

EOG 01 - 0236

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.